# எல்லாரும் சொஸ்தமானார்கள் - பாகம் 2



நாம் முந்தின பாகத்தில் (பாகம் ஒன்றில்) கண்டது போல ஆண்டவர் தம்மிடம் வந்த அனைவரையும் சொஸ்தமாக்கினார். அதிலும், சிலரை அவர்களுடைய விசுவாசத்தை, அன்பை, பொறுமையை, தாழ்மையை (சோதித்து) கண்டு, அவர்களுடைய வாழ்வில் பரிபூரண சுகத்தை அருளினார். அப்படிப்பட்ட சிலரை பற்றி நாம் இவ்விரண்டாம் பாகத்தில் தியானிப்போம்.

### (1) 38 வருட வியாதியஸ்தன்:

**"இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார். எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்." (யோவான் 5:1-4).** மேற்கண்ட வசனங்களில், பெதஸ்தா குளம் அருகே உட்கார்ந்திருந்த அனைவரும் தங்களின் சுகத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர். **வசனம் 4** இல் கூறப்பட்டுள்ளபடி, ஒவ்வொருவரும் எப்பொழுது குளம் கலங்கும் என்று எதிர்பார்த்திருப்பர். எப்படியாவது தங்கள் வியாதியில் இருந்து சுகம் பெற வேண்டும் என்று அனைவரும் எதிர்பார்த்து இருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் நடுவிலேயே 38 வருடமாய் வியாதி பட்டவன் இருந்தான். **"முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி:**

சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். “ (யோவான் 5:5,6). அங்கு அநேகர் சுகவீனராய் இருந்தாலும், ஆண்டவர் இவன் மீது மனதிரங்கி அவனிடம் வந்தார். காரணம், அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து. ஆம் ஆண்டவர் அவனுடைய நிலையை காண்கிறார். 38 வருடம் என்பது ஏறக்குறைய அவன் வாழ்நாள் முழுவதையும் அவன் வியாதியின் வேதனையிலேயே கடத்தியிருந்தான். அப்படிப்பட்டவனை பார்த்து ஆண்டவர், சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டபொழுது, “அதற்கு வியாதிஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.“ (யோவான் 5:7). இங்கு தன்னிடம் பேசுகிறவர் இன்னார் என்பதை அறியாத அவன், தன்னுடைய இயலாமையையே கூறுகிறான். அவன் நம்பிக்கை இன்னும் குளத்தின் மீதே இருந்தது.

ஆனால், “இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார்.“ (யோவான் 5:8). இங்கு ஆண்டவர் வியாதியின் மீது அதிகாரம் உடையவராய், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். இங்கு அவனுக்கு என்ன வியாதி என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், “உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.“ (யோவான் 5:9). அவனை 38 வருடமாய் மிகவும் பலவீனப்படுத்திய அந்த வியாதியை குறித்து எண்ணாமல், குளத்தை குறித்து எண்ணாமல், ஆண்டவரின் வார்த்தையை மட்டும் நம்பி சொஸ்தமானவனாய், தன் படுக்கை எடுத்துக் கொண்டு நடந்தான். 38 வருடமாய் பலவீனத்தோடு இருந்த அவன், சொஸ்தமானவனாய் முழு பலத்தோடு நடந்து சென்றது, அவனுக்கும் அவனை சுற்றி இருந்த அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் தந்திருக்கும். ஆனால் இதை பொறுக்க மாட்டாதவர்களாய், “ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள்.“ (யோவான் 5:10). ஆனால், “அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான்.“(யோவான் 5:11). இங்கு வசனம் 11-ல், என்னைச் சொஸ்தமாக்கினவர் என்று அவன் கூறுவதிலிருந்து, அவன் தன் சூழ்நிலையையோ, பெலவீனத்தையோ பாராமல் ஆண்டவர் வார்த்தையையே நம்பி சுகம் பெற்று, பெலனடைந்து தன் படுக்கையை எடுத்துச் சென்றான். “அதற்குப்பின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.“ (யோவான் 5:14). இங்கு ஆண்டவர் அவனுடைய 38 வருட வியாதியின் காரணத்தை அவனிடம் கூறுகிறார். அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்று அவனை எச்சரிக்கவும் செய்தார். இங்கு ஆச்சரியமான காரியம் என்னவெனில், ஆண்டவர் மானிடரை மீட்க உலகில் வந்து உதிப்பதற்கு முன்பே, பாவத்தினால் 38 வருடம் வியாதியாய்

இருந்த அவனை, அவனுடைய பாவத்தை மன்னித்து சொஸ்தமாக்கினார். இதனை அவனும் உணர்ந்து கொண்டான். அதனால், **"அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்." (யோவான் 5:15)**. இங்கு அவனுக்கு என்ன வியாதி இருந்தது, அவன் என்ன பாவம் செய்தான் என்பது குறிப்பிடப்படாதிருந்தாலும், ஆதி முதலாய் சகலத்தையும் அறிந்த ஆண்டவர், நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம், மனம் திரும்புதலையும், அவர் மீது, அவர் வார்த்தையின் மீது வைக்கும் விசுவாசத்தை மட்டும் தான் என்பது விளங்கும். அப்பொழுது எப்பேர்பட்ட பாவமாய் இருந்தாலும் அது மன்னிக்கப்பட்டு, எத்தனை வருட கொடிய வியாதியாய் இருந்தாலும் பரிபூரண சுகத்தையும் விடுதலையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது சத்தியமாகும்.

### (2) லாசரு:

**யோவான் 11:1-3** வசனங்களில், **"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான். கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான். அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்."**. இங்கு உள்ள குடும்பம் ஏற்கெனவே ஆண்டவருக்கு நன்கு அறிமுகமான குடும்பம். ஆண்டவருடைய வல்லமையையும், தெய்வத்துவத்தையும் அறிந்த குடும்பம். ஆண்டவர் அருளிய விடுதலையை, கண்ணார கண்ட குடும்பம். எனவே லாசரு வியாதிப்பட்ட உடனே அதை ஆண்டவருக்கு அறிவிக்க ஆள் அனுப்பினார்கள். இங்கு அருமையான ஒரு காரியம், லாசரு வியாதிபட்டிருக்கிறான் என்று கூறாமல், நீர் சிநேகிக்கிறவன் என்று கூறி இருப்பது, ஆண்டவருக்கும் லாசருவுக்கும் உள்ள உறவை தெரிவிக்கிறது. அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம் ஆண்டவர் எங்கிருந்தாலும் உடனே வந்து தங்கள் சகோதரனை, ஆண்டவர் சிநேகிக்கிறவனை சுகப்படுத்துவார் என்பதைத்தான்.

ஆனால், **யோவான் 11:4-6** வசனங்கள் கூறுகிறது, **"இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார். இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்."**. மேற்க்கண்ட வசனங்களின் மூலம் ஒன்றை நாம் அறிந்து கொள்ளலாம். லாசரு தற்பொழுது அனுபவிக்கும் வியாதியின் வேதனை, மரணத்திற்கு ஏதுவானது போல் இருந்தாலும், உண்மையில் அது ஆண்டவருடைய திட்டப்படி அவருடைய நாமம் மகிமைப்படும்படியாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவம் மகிமைப்படும்படியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை மார்த்தாள், மரியாள் மற்றும்

லாசரு அவர்களுக்கு இது ஒரு கடினமான காலமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட இந்த வேதனை, அவர்கள் துக்கப்பட்டு துவண்டுபோகும் படியாய் அல்ல, அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படுவதற்காகவே. **வசனம் 11:5** கூறுகிறது, **இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்** என்று. ஆம் அவர்களிடத்தில் அவர் அன்பாய் இருந்தார். இது எவ்வளவு பெரிய பாக்கியம். ஆனால் **வசனம் 11:6** இன் படி, **அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்** என்று. இங்கு ஆண்டவர் எப்படி மற்றவர்களின் விசுவாசத்தை சோதித்தாறோ, அப்படியே இவர்களுடைய விசுவாசத்தையும் சோதிக்கும் படியாய் தாம் இருந்த இடத்திலேயே இருந்தார். ஒரு பக்கம் மார்த்தாளும், மரியாளும் ஆண்டவர் சீக்கிரம் வந்து லாசருவை சுகப்படுத்துவார் என்று காத்திருக்க, ஆண்டவரோ அவர்கள் தம் மீது வைத்திருக்கிற அன்பிலும், விசுவாசத்திலும் எந்நிலையில் இருக்கின்றனர் என்பதை காண்பிக்க, அவர்களை காத்திருக்க செய்தார். ஆண்டவர் லாசரு இருக்கும் இடத்திற்கு சென்றுதான் அவனை சொஸ்தப்படுத்த வேண்டும் என்றல்ல, அவர் ஒரு வார்த்தை சொன்னாலே போதும் லாசரு சொஸ்தமடைவான். ஆனால் ஆண்டவரோ எப்படி கானானிய ஸ்தீரி, நூற்றுக்கு அதிபதி ஆகியோரின் விசுவாசத்தை பரீட்சித்து காட்டினாரோ, அதேபோல் இவர்களின் விசுவாசத்தையும், தேவனுடைய வல்லமையையும் அனைவரும் காணும்படியாய் அமைதியாக இரண்டு நாள் இருந்தார்.

**யோவான் 11:7,8** வசனங்களில், **“அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார். அதற்குச் சீஷர்கள்: ரபீ, இப்பொழுதுதான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.“**. தம்முடைய வேலையை உணர்ந்தவராய் புறப்பட தயாரானார். ஆனால் இதை அறியாத சிஷர்களோ ஆண்டவரிடம் கேள்வி எழுப்பினர். **“இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந் திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.“ (யோவான் 11:11).** இங்கு ஆண்டவர் ஆவியில், லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டதை உணர்ந்தவராய், அவனை உயிரோடு எழுப்பப் போகிறேன் என்றார். ஆனால் மறுபடியும் சீஷர்கள் அறியாமையினால் பேதையராய், **“அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி; நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார். அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான். இயேசு வந்தபோது அவன் கல்லறையில்**

**வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார். பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது. யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்." (யோவான் 11:12-19).** இங்கு அநேகர் மார்த்தாளுக்கும், மரியாளுக்கும் ஆறுதல் சொல்ல வந்திருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்து காத்திருந்ததெல்லாம் ஆண்டவரின் வருகையைதான். **"இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள். " (யோவான் 11:20-22).**

இங்கு நாம் சில அருமையான, மேன்மையான காரியங்களை காணலாம். ஒன்று துக்கத்தின் நடுவிலும், ஆண்டவர் தாமதித்து வந்திருந்தாலும், தன் சகோதரனை கல்லறையில் வைத்து நான்கு நாட்கள் கடந்து இருந்தாலும், ஆண்டவர் வருகிறார் என்று கேட்டவுடனே, மார்த்தாள் அவரை காண ஓடி வருகிறாள். ஆண்டவர் ஒருவேளை சீக்கிரம் வந்திருந்தால் லாசரு மரித்திருக்க மாட்டான் என்பதையும், அதே நேரத்தில் இப்பொழுதும் ஆண்டவர் கிரியை செய்ய முடியும் என்பதையும் அறிக்கையிடுகிறாள். **"இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். " (யோவான் 11:23,24).** இங்கு ஆண்டவர் வெளிப்படையாகவே லாசரு உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். ஆனால் அவளோ அனைவரும் உயிர்த்தெழும் கடைசி நாட்களை குறித்து ஆண்டவர் பேசுகிறார் என்று நினைத்தாள். மேலும், **"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்." (யோவான் 11:25-27).** இங்கு ஆண்டவர் மார்த்தாளின் விசுவாச அறிக்கையை அவளே அறிக்கையிட செய்கிறார். ஆனால் அவளோ, அவளை சுற்றியுள்ளவர்களோ நடக்கப்போகிறதை குறித்து அறியாதிருந்தனர்.

**"இவைகளைச் சொன்னபின்பு, அவள்போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள். அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள். இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார். அப்பொழுது, வீட்டிலே அவளுடனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய்**

**எழுந்துபோகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள். " (யோவான் 11-28-31)**. இங்கு ஆண்டவர் முதலில் கூறியபடி லாசருவின் உயிர்த்தெழுதல் அநேகர் ஆண்டவரிடத்தில் விசுவாசமுள்ளவராகிறதற்கு ஏதுவானதாக, தேவனுடைய குமாரன் மகிமைப்படும்படியாய் இருக்கும் என்றபடி, தான் மார்த்தாள், மரியாள் வீட்டிற்கு செல்லாமல், மார்த்தாள், மரியாள் மற்றும் அனைவரும் தாம் இருக்கும் இடத்திற்கு வரும்படியாய், அமைதியாய் தான் இருந்த இடத்திலேயே இருந்தார். **யோவான் 11:32** கூறுகிறது, **"இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்."**.

இங்கு மரியாள் எந்த பாதத்தின் அருகே அமர்ந்து தேவ வார்த்தையை கேட்டாளோ, அதே பாதத்தில் விழுந்து, மார்த்தாள் கூறியபடியே இவளும், ஆண்டவர் இங்கு இருந்திருந்தால் தன் சகோதரனாகிய லாசரு மரித்திருக்க மாட்டான் என்றாள். ஆனால் ஆண்டவர் செய்யப் போகிறதை ஒருவரும் அறியாதிருந்தனர். ஆண்டவரே தம் திட்டப்படி, சித்தப்படி, தம்முடைய வேளையிலே அனைத்தையும் செய்து முடிக்கிறவராய் இருக்கிறார். இங்கு மற்றொரு அருமையான காரியம், **"அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்." (யோவான் 11:33-35)**. இங்கு நடக்கப் போகிறதை அறிந்த மற்றவராக இருந்தால், மனதில் ஒருவேளை நகைத்திருப்பர். ஆனால் ஆண்டவரோ தான் இன்னும், சில மணித்துளிகளில் செய்யப் போகிறதை அறிந்திருந்தும், அதன் மூலம் அவர்கள் கண்ணீர் துடைக்கப்பட போகிறது என்று அறிந்திருந்தும், மனதுருக்கமுள்ளவராய் அவர்கள் கண்ணீர் விட்டு அழுவதை கண்டு, ஆண்டவரும் கண்ணீர் விடுகிறார். ஆம் இன்று நாமும் கண்ணீர் விடும்படியாய் சில சூழ்நிலைகளுக்குள்ளாய் கடந்து செல்லலாம். ஆண்டவருக்கு தெரியும் அதற்கு எப்பொழுது, எப்படி தீர்வு வரும் என்பது. ஆனாலும் நாம் கண்ணீர் விடுகிற தற்போதைய சூழ்நிலையில் அவரும் மனதுருக்கமுள்ளவராய், நம் கண்ணீரை காண்கிறவராய், நம்மோடு சேர்ந்து அவரும் கண்ணீர் விடுகிறார். **"அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்." (யோவான் 11:36,37)**. இங்கு இரண்டு காரியங்களை நாம் காணலாம். ஒன்று ஆண்டவர் எவ்வளவாய் லாசருவையும், மார்த்தாள், மரியாளையும், சிநேகித்தார் என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டனர். இரண்டாவது குருடனுடைய கண்களைத் திறந்த நம் ஆண்டவர், ஜீவனையும் அழியாமல் காக்க வல்லவர் என்பதை அங்கு வந்தவர்களே அறிக்கையிட செய்தார். ஆனால் ஒன்றை அவர்கள் அறிந்திருக்கவில்லை, சாகாமல் இருக்க மாத்திரமல்ல, செத்து கல்லறையில் வைக்கப்பட்ட பின்னரும், ஆண்டவரால் கிரியை செய்ய முடியும் என்பதை. **"அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது;**

**அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது. இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்.“ (யோவான் 11:38,39).** இங்கு ஆண்டவர் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துகிறார். ஆம் அதிகாரத்தோடு **கல்லை எடுத்துப்போடுங்கள்** என்றார். ஆனால் இன்னும் நடக்கப் போகிறதை பற்றி யாரும் அறியாதபடியால், **இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே** என்றாள். **“இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.“ (யோவான் 11:40).** இங்கு, மறுபடியும் ஆண்டவர் மார்த்தாளின் விசுவாசத்தை கட்டி எழுப்புகிறார். **“அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.“ (யோவான் 11:41,42).** இங்கு ஆண்டவர் பிதாவை நோக்கி செய்யும் வேண்டுதல் மிகவும் அருமையானதாகும். ஆண்டவர் அனைவருடைய விசுவாசத்தையும் கட்டி எழுப்பும்படியாகவே வேண்டுதல் செய்கிறார். **“இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.“ (யோவான் 11:43).** இங்கு ஆண்டவர் மரணத்தின் மீது அதிகாரம் உடையவராய் கட்டளை இடுகிறார்.

**“அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார். அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.“ (யோவான் 11:44-46).** இங்கு, மார்த்தாள் மரியாள் மட்டுமல்ல, அநேகர் ஆண்டவருடைய வல்லமையை காணும்படியாய், ஆண்டவர் இவ் அற்புதத்தை செய்தார். இங்கு மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு எவ்வாறு மகிழ்ந்தார்கள் என்பதை பற்றி பதிய படாவிட்டாலும், உண்மையில் அவர்கள் எல்லை இல்லா ஆனந்தத்தை அடைந்திருப்பர். மரித்து கல்லறையில் வைத்து, எல்லாம் முடிந்தது என்று அழுது கொண்டிருந்த நிலையில், கல்லறையில் இருந்து ஜீவன் பெற்றவனாய், பரிபூரண சுகத்தோடு லாசரு எழுந்து வந்த செயல், உண்மையில் மார்த்தாள் மரியாளை பிரமிப்படைய செய்திருக்கும். அவர்கள் ஆண்டவரின் அன்பில் திளைத்திருப்பார்கள். **யோவான் 12:1,2** கூறுகிறது, **“பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில்**

**ஒருவனாயிருந்தான்.**". ஆம் மரண ஓலம் கேட்ட வீட்டை, ஆண்டவர் விருந்து கொண்டாடும் வீடாய் மாற்றினார். மார்த்தாள் எப்பொழுதும் போல் ஆண்டவருக்கு பணிவிடை செய்வதில் மும்மரமாய் இருந்தாள். ஆனால் மரியாளோ, **"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. " (யோவான் 12:3)**. இங்கு மரியாள் நன்றியுள்ள இருதயத்தோடு, ஆண்டவரை தொழுது கொள்வதை காணலாம். மார்த்தாள் எப்பொழுதும் போல் பணிவிடை செய்தாள். லாசரு மகிழ்வோடு ஆண்டவருடன் விருந்தில் இருந்தார். ஆனால் மரியாளோ அவருடைய தெய்வீகத்தை உணர்ந்தவளாய், விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளத தைலத்தை, அவருடைய பாதத்தில் பூசி, களங்கமில்லாத நன்றியுள்ள உள்ளத்தோடு, அவருடைய பாதத்தில் சரணடைந்தாள். அவள் செயலை அனைவரும் உணர்ந்து கொள்ளும் படியாய், **வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது**.

ஆனால் நயவஞ்சக நெஞ்சோ, **"அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்." (யோவான் 12:4-6)**. **"அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்." (யோவான் 12:7)** என்றார். ஆம், லாசரு உயிர்த்தெழுந்தான், ஆனால் தான் இன்னும் சில நாட்களில் தன் ஜீவனை அனைவருக்காகவும், பிதாவின் கையில் ஒப்படைப்பதற்கு ஆயத்தமாக, மரியாள் இதை செய்தால் என்றார். உண்மையில் ஆண்டவர் கூறியதை அங்கு இருந்த ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை. நடக்கப்போகும் காரியத்தை பற்றி அவர்கள் எண்ணி கூட பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால், மேலும் ஆண்டவர், **"தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்." (யோவான் 12:8)**. ஆம் லாசருவைப்போல், ஆண்டவரும் கல்லறையில் இருந்து மரணத்தை ஜெயித்தவராய் வெளிவரப் போகிறார். அதை அனைவரும் காணப் போகிறார்கள். ஆனாலும் தாம் இப்பொழுது மாம்ச சரீரத்தோடு அவர்களோடு விருந்து உண்பதை போல், இனி அவர்களோடு அவர் இருக்கப் போவதில்லை என்றார். ஆனாலும், ஆண்டவர் கூறிய இவ்வார்த்தையையும் ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை. இறுதியாக, **"அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள். லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால், பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனைபண்ணினார்கள்."**

(யோவான் 12:9-11). இங்கு ஆண்டவர் ஏற்கெனவே கூறியபடி அநேகர் ஆண்டவரிடத்தில் விசுவாசம் வைக்க, லாசருவின் விடுதலை (சுகம்) காரணமாக இருந்தது. வசனம் 11 கூறுகிறபடி லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனைபண்ணினார்கள் என்பது, அவர்கள் ஏற்கெனவே ஆண்டவரை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தனர் என்பதை விளக்குகிறது (யோவான் 5:16). ஆனால் அவர்கள் திட்டப்படி எதுவும் நடக்கப்போவதில்லை. ஆண்டவருடைய அநாதி தீர்மானத்தின்படியே எல்லாம் நடக்கப் போகிறது என்பதை அறியாதிருந்தார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் ஜீவனை தாமே நமக்காக கொடுத்து, லாசருவை காப்பாற்றி இரட்சித்தது போல், நம்மையும் காப்பாற்றி இரட்சிக்கிறார். ஆண்டவர் அருளும் நன்மைகளை நாமும் பெற்று, மார்த்தாள், மரியாள் லாசருவை போல் மகிழ்ந்து, ஆண்டவருடன் நித்திய விருந்தில் பங்கு பெறுவோமாக. தொடர்ந்து தியானிப்போம். ஆமென் அல்லேலூயா.